# செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கான விலங்கு நல வழிமுறைகள்

**விலங்கு நல வழிமுறைகள், (உரிமையாளர்களுக்கு) குறைந்தபட்ச தரஅளவை நிர்ணயிக்கிறது. மேலும், உரிமையாளர்களின் பொறுப்புகளை விளக்குவதன் வழி நீங்கள் உங்களின் செல்லப்பிராணிகளுக்கு எப்படி நல்ல வசதியான வாழ்வை வழங்கலாம் என்பதை உங்களுக்குப் புரியவைக்க உதவுகிறது.**

**அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் கீழ்காணும் குறைந்தபட்ச தரஅளவு, மாற்றாக எதுவும் குறிப்பிடப்படாத வரையில் , பொருந்தும்.**

## 1 செல்லப்பிராணி உரிமையாளர்களின் கடமையான பொறுப்புகள்

- செல்லப்பிராணியின் பராமரிப்புக்கு தற்காலிகமான அல்லது நிரந்தரமான ஏற்பாடுகளை முதலில் செய்யாமல் நீங்கள் அதை எந்த இடத்திலும விடக்கூடாது.






- உங்கள் செல்லப்பிராணி தப்பிக்காமல் இருக்க உங்கள் கதவுகளையும நுழைவாயில்களையும் மூடிவைக்கவும்.




- உங்களுடைய செல்லப்பிராணி காணாமல் போய்விட்டால் காவலர்களிடம் அல்லது AVA-ல் புகார் செய்யவேண்டும். மேலும், “செல்லப்பிராணி காணவில்லை ”எனும் விளம்பரங்களை வைப்பதின் வழியாகவும் அல்லது அண்டைவீட்டார்களிடமும் விலங்கு நல குழுக்களிடமும் உதவி கோருவதின் வழியாகவும் அதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும்.




## 2 விலங்கு இருப்பிடமும் சுற்றுச் சூழலும்

### சுற்றுச் சூழல்



- உங்கள் செல்லப்பிராணி சாப்பிடவும், ஓய்வெடுக்கவும், தூங்கவும், மறைந்திருக்கவும் ஒரு பாதுகாப்பான, நல்ல காற்றோட்டமான, வசதியான மற்றும் சுத்தமான சுற்றுச் சூழல் தேவை.

அதிகமான சத்தம், சூரிய ஒளி, வெப்பம், ஈரப்பதம் அல்லது பலத்த காற்று உள்ள சூழலில் அதை விட்டுவிடக்கூடாது.

### அடைத்துவைத்தல்

- உங்கள் செல்லப்பிராணி எளிதில் தப்பித்துவிடாத வகையிலும் அவற்றை தவறுதலாக திறந்துவிட்டிடாத வகையிலும் ஒரு பாதுகாப்பான பகுதியில் அதை வைத்திருக்கவேண்டும்.
- ஒன்றுக்கொன்று ஒத்து வராத செல்லப்பிராணிகள், அவை ஒரே வகையைச் சார்ந்தவையாக இருந்தாலும் தனித் தனியே தங்கவைக்கப்படவேண்டும்.
- உங்கள் செல்லப்பிராணி வசதியாக சுற்றி வரக்கூடிய வகையில் ஒரு பெரிய இடத்தில் அதை வைத்திருக்க வேண்டும்.
- உங்கள் செல்லப்பிராணியின் உணவு மற்றும் தண்ணீர் பாத்திரங்கள் அதன் கழிவால் பாதிக்கப்படாத பகுதியில் வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.






- பறவைகள்
உங்கள் செல்லப்பிராணியின் வால் மற்றும் விரிந்த இறக்கைகள் கூண்டின் ஓரத்தில் படாத வகையில் பெரியக் கூண்டாக இருக்க வேண்டும். அது சரியான அளவிலும் நீளத்திலும் மேலும் அதை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள் நன்கு பிடிமானம் உள்ளதாகவும் இருக்க வேண்டும். கிளி போன்ற சில பறவைகள் கூண்டின் கம்பியை மென்றுவிடும் என்பதால் கூண்டுகள் பாதுகாப்பான மற்றும் விஷமற்ற பொருட்களால் தயாரிக்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவும்.
    - பறவைக் கூண்டில் வைக்கப்பட்டிருக்கும் பறவைகளுக்கு அதனுள்ளேயே கூடும் மறைவிடமும் வழங்கப்பபடவேண்டும். கூண்டில் வைக்கப்பட்டிருக்கும் பறவைகள் ஓய்வெடுக்கவும், பாதுகாப்பாக உணரவும் அக்கூண்டை மாலை நேரத்தில் துணியால் மூடிவைக்கவும்.
- நாய்களும் பூனைகளும்
உங்கள் செல்லப்பிராணி ஓய்வெடுக்கவும், சாப்பிடவும், உடற்பயிற்சி செய்யவும், சுற்றி வரவும் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு பகுதியை வழங்கவும். அது ஓய்வெடுக்கும் பகுதியைத் தவிர்த்து, கழிவறை பகுதியாக பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒரு இடத்தையும் வழங்கவும். கூண்டில் வைக்கப்பட்டுள்ள பூனைகள் மேற்பார்வையின் கீழ் உடற்பயிற்சிக்காக தினந்தோறும் திறந்துவிடப்பட வேண்டும்.
- முயல்கள், பெருச்சாளிகள், பாலைவனஎலிகள் **(Gerbils)**, வெள்ளெலிகள் மற்றும் அணில்கள் **(Chinchillas)**
உங்கள் செல்லப்பிராணிக்கு சுத்தமான உலர்ந்த படுக்கையும், ஓய்வெடுக்கவும், சாப்பிடவும், உடற்பயிற்சி செய்யவும், சுற்றி வரவும் ஒரு வரையறுக்கப்பட்டப் பகுதியை வழங்க வேண்டும்.

### விலங்கு கட்டுதல்

- உங்கள் செல்லப்பிராணியை சங்கிலி, தலைக் கயிறு, இழுத்துச் செல்லும் கயிறு, கடிவாளம் அல்லது கயிற்றைக் கொண்டு கட்டி அதன் நடமாட்டத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுபடுத்துவதே குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டிவைத்தல் என்பதாகும்.
- பிரச்சனை ஏற்படும் வகையிலோ , இரத்த ஓட்டம் தடைப்படும் வகையிலோ கட்டிவைக்கக் கூடாது.
- பறவைகளை கட்டிவைக்கும் கயிறு அவை வசதியாக சுற்றி வரும் வகையில் நீளமானதாக இருக்க வேண்டும்.



- ஒரு இறுகக்கூடிய சங்கிலி தொடர்ச்சியாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அதன் ஒரு முனையில் கழுத்துப் பட்டையைப் போன்று இருக்கும். அப்பட்டை நாயின் கழுத்தில் அதன் காதுகளுக்குப் பின்புறம் மிகவும் மென்மையான பகுதியில் அணிவிக்கப்படும். அந்த இறுகக்கூடிய சங்கிலி உங்கள் நாயின் கழுத்தை நெருக்கி இரத்த ஓட்டத்தை நிறுத்தலாம். எனவே, மேற்பார்வையின் கீழ் மட்டுமே அது பயன்படுத்தப்பட வேண்டும்.




- நாய்களைக் கட்டிவைக்கும் கயிறு நாயின் உடல் நீளத்தை (அதன் மூக்கு முதல் வாலின் அடிப்பகுதிவரை) விட குறைந்தபட்சம் இரு மடங்கு இருக்க வேண்டும்.
- நாய் வசதியாக படுக்கக்கூடிய வகையில் மிகவும் தாழ்வாக கட்டிவைக்கப்பட வேண்டும்.

## 3 விலங்கு நிர்வகிப்பும் பராமரிப்பும்

### உணவு முறையும் உணவு ஊட்டலும்



- உங்கள் செல்லப்பிராணிக்கு நல்ல சீரான மற்றும் சத்தான உணவை போதுமான அளவு வழக்கமான இடைவெளியில் வழங்கவும்.
- சுத்தமான குடிநீர் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

### சுகாதார பராமரிப்பு



- உங்கள் செல்லப்பிராணியை தினந்தோறும் கவனித்து வரவும். உங்கள் செல்லப்பிராணியிடம் ஏதேனும் காயம், சுகவீனம்அல்லது நோயிற்கான அறிகுறி தென்பட்டால உடனே கால்நடை மருத்துவரின் உதவியை நாடவும்.

### ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

- உங்கள் செல்லப்பிராணிக்கு வழக்கமான உடற்பயிற்சி வழங்குவதுடன் நல்ல தொடர்பையும் வைத்திருக்கவும் (அதன் இனத்திற்கும் உடல் நலத்திற்கும் ஏற்புடையதாக).
- தேவையில்லாத வலி அல்லது பாதிப்பு ஏற்படுத்தும் பயிற்சிமுறைகளையும் வழிமுறைகளையும் தவிர்க்கவும்.



### கையாள்வதும் எடுத்துச் செல்வதும்

- உங்கள் செல்லப்பிராணிக்கு காயமோ அல்லது தேவையில்லாத வேதனையோ ஏற்படாத வகையில் அதை நீங்கள் கையாளவும் எடுத்துச் செல்லவும் வேண்டும். அது வசதியாகவும் மற்றும் பாதுகாப்பாகவும் கட்டிவைக்கப்பட வேண்டும்.



- நீங்கள் ஒரு கூண்டை அல்லது பெட்டியைப் பயன்படுத்தினால் செல்லப்பிராணி நிற்கவும், திரும்பவும், படுக்கவும் அதற்கு வசதியாக இருப்பதை உறுதி செய்யவும்.



- உங்கள் செல்லப்பிராணியை வாகனத்தின் பின்புறத்தில் அல்லது குறைந்த காற்றோட்டமுள்ள மூடிவைக்கப்பட்டுள்ள இடத்தில் வைத்து எடுத்துச் செல்லக்கூடாது. வாகனத்தில் யாரும் இல்லாதபோது அதை தனியே விட்டுச் செல்லக்கூடாது.
- பயணிக்கும் போது உங்கள் செல்லப்பிராணி கீழே விழுந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்யவும். திறந்த வாகனத்தில் எடுத்துச் சென்றால் அதன் மீது அதிகமான மழை, காற்று மற்றும் சூரிய ஒளி படாமல் பாதுகாக்க வேண்டும்.



### கர்ப்பமான மற்றும் குட்டி விலங்குகளின் பராமரிப்பு

- உங்களின் கர்ப்பமான செல்லப்பிராணி குட்டியை ஈன்றெடுக்கச் சிரமப்பட்டால் , கால்நடை மருத்துவரின் உதவியை நாடவும்.





- குட்டியை பெற்றெடுத்தப் பிறகு தாயிற்கும் அதன் சிறு குட்டிக்கும் பாதுகாப்பான மற்றும் வசதியான சூழலை வழங்கவேண்டும்.
- சிறு குட்டி தாய்பால் முழுவதுமாக மறக்கடிக்கப்பட்டு அது திட உணவை உட்கொள்ளும் வரையில் தாயிடம் இருந்து அதை பிரித்துவிடக் கூடாது. தாயக்கு போதுமான பால் சுரக்கவில்லை என்றால் அல்லது உங்கள் செல்லப்பிராணி அநாதையாகி விட்டால் மட்டுமே பாலுக்கான மாற்றுப் பொருளை பயன்படுத்த வேண்டும்.



### இறக்கையை வெட்டுதல்

- பறவையின் சிறகுகளை வெட்டுவதின் வழி அதன் பறக்கும் திறனைக் குறைத்து அது தப்பிப்பதை தடுப்பது இறக்கையை வெட்டுதல் எனப்படும்.
- இறக்கை வெட்டப்பட்டால் உங்கள் செல்லப்பிராணிக்கு அது எவ்வித மன அழுத்தத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது.



- குளிர் சீதோஷன நாய் வகைகளை குளிர்ந்த சூழலில் வைத்திருக்க போதுமான நிழல், காற்றோட்டம் அல்லது குளிர்சாதன வசதி வழங்கப்படவேண்டும். வெப்பமான சூழலில் அவற்றை உடல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டாம். உதிர்ந்த முடிகள் அப்படியே உடலில் தங்கிவிடுவதைத் தவிர்க்க அவற்றை வழக்கமாக பராமரிக்கவும்.



AVA
Agri-Food & Veterinary Authority of Singapore